கூடுதல் மாவட்ட நீதிமன்றம், (விரைவு நீதிமன்றம்), பழனி
MCOP.No.383/2023
ம.சா.2

2026-ம் வருடம் ஜுலை மாதம் 06-ம் நாள் திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.2-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 95-வது பிரிவின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில்குமார் | தொழில் | : |
| த/பெ | : | வயது | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | நாள் | : 06.07.2026 |
| மாவட்டம் | : | | : |

**<u>முதல் விசாரணை:</u>**

என் சாட்சியத்தின் முதல் விசாரணை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொன்னவை தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை .</u>

விபத்து சம்பந்தமாக நான்தான் புகார் கொடுத்தேன். அதில் நான் என் சொந்த ஊர் விலாசத்தை கொடுத்திருக்கிறேன். என் ஆதார் கார்டில் உள்ள விலாசத்தை நிரூபண வாக்குமூலத்தில் கொடுத்திருக்கிறேன். புகாரில் சொல்லப்பட்ட விலாசத்தில் குடியிருந்து வருவதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். புகாரில் முத்துச்சாமி ஓட்டுனராக வந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும் ஆறுமுகமும் வாகனத்தின் பின்புறத்தில் உட்கார்ந்து பயணம் செய்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் அவர் முன்னிலையில் நான் சொல்ல சொல்ல என் முன்னிலையில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவர் சரியென ஒத்துக் கொள்ளப்பட்டது.
**ஒப்பம்: அ.மலர்விழி, எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட நீதிபதி, பழனி.